செ. கு. எண்:238 நாள் : 06.09.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 6.9.2013

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், மல்லசமுத்திரம் கீழ்முகம் கிராமம், திருச்செங்கோடு – சேலம் சாலையில் 17.7.2013 அன்று இரு சக்கர வாகனம் மீது அரசுப் பேருந்து மோதியதில் இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த சின்னகொல்லப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. இளங்கோ என்பவர் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், குலசேகரன் கோட்டை கிராமம், குரங்குத் தோப்பு அருகே 19.7.2013 அன்று நின்று கொண்டிருந்த லாரி மீது அரசுப் பேருந்து மோதியதில் உசிலம்பட்டி வட்டம், கட்டத்தேவன்பட்டியைச் சேர்ந்த பேருந்து ஓட்டுநர் திரு. கண்ணாடி, பேருந்தில் பயணம் செய்த ஆத்தூர் வட்டம் திருவாச்சூரைச் சேர்ந்த திரு.முருகேசன் ஆகியோர் சம்பவ இடத்திலேயும்; திருமங்கலம் வட்டம், விடத்தகுளத்தைச் சேர்ந்த திரு. செல்வம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றியும் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் நகரம், ஹில் பங்க் சந்திப்பு அருகே 20.7.2013 அன்று இரு சக்கர வாகனம் மீது அரசுப் பேருந்து மோதியதில் இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த திரு. பாலன் என்பவர் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் வட்டம், காட்டூர் பேருந்து நிலையம் அருகே 11.7.2013 அன்று சாலையை கடக்க முயன்ற வீதிவடங்கம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி செல்வமணி என்பவர் மீது அரசுப் பேருந்து மோதியதில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 20.7.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், வாலாஜாபேட்டையைச் சேர்ந்த திரு. நாகராஜ் என்கிற பாலாஜி 18.7.2013 அன்று சென்னை, கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையம் அருகே நடந்து சென்று கொண்டிருந்த போது அரசுப் பேருந்து மோதியதில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், சிறுகமணி மேற்கு கிராமம், கரூர் - திருச்சிராப்பள்ளி பிரதான சாலையில் 19.7.2013 அன்று இரு சக்கர வாகனம் மீது அரசுப் பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த கௌடியாலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. பாலசுப்பிரமணியன் என்பவரின் மகன் நாகராஜ் என்கிற ராஜா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், ஆரல்வாய்மொழி சோதனை சாவடி அருகே 22.7.2013 அன்று இரு சக்கர வாகனம் மீது அரசுப் பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த ஆரல்வாய்மொழி வடக்கு கிராமத்தைச் சேர்ந்த திரு. கண்ணன் என்பவரின் மகன் முத்துராமன் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம், ஜி.எஸ்.டி சாலையில் 31.7.2013 அன்று இரு சக்கர வாகனம் மீது அரசுப் பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த திருப்பரங்குன்றத்தைச் சேர்ந்த திரு. துரைசாமி என்பவரின் மகன் கணேசன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்துகளில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.



**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்